பக்கங்கள் 10+1

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 27 ஞாயிற்றுக்கிழமை 09.02.2025 | அதிர்வு 192

## ஜனாதிபதி அநுர நாளை அரபு இராச்சியம் பயணம்



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம்மேற் கொண்டு நாளை ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு 02▸

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# சிரேஷ்ட ஊடகவியலாளர் இரா. பாரதி காலமானார்!



சிரேஷ்ட தமிழ் ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதி தனது 62 ஆவது வயதில் யாழ்ப்பாணத்தில் இன்று காலமானார்.

சுமார் 40 இற்கும் மேற்பட்ட வருட ஊடகத்துறை அனுபவத்தைக் கொண்ட இராஜநாயகம் பாரதி ‘தினக்குரல்’ பத்திரிகையின் வாரமலர் மற்றும் இணையத்தளத்தின் முன்னாள் ஆசிரியரும் ஆவார்.

உயிரிழக்கும்போது இராஜநாயகம் பாரதி ‘வீரகேசரி’யின் யாழ். பிராந்திய கிளையின் ஆசிரியராகவும் கடமை யாற்றியுள்ளார்.

## குறைந்த பக்கங்களுடன் ‘மாலை முரசு’

இன்று பகல் நாடு முழுவதிலும் ஐந்து மணி நேரம் நீடித்த மின்வெட்டுக் காரணமாக இன்றைய ‘மாலை முரசு’ குறைந்த பக்கங்களுடன் பிரசுரமாகின்றது.

வாசகர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருந்துகின்றோம்.

- நிர்வாகம் -



# நாடு முழுவதிலும் இன்று 5 மணி நேர மின்வெட்டு!

## குரங்கால் ஏற்பட்ட வினை என்கின்றார் அமைச்சர்

பாணந்துறை உப மின் கட்டமைப்பில் ஏற்பட்ட திடீர் மின் தடை காரணமாக நாடு முழுவதும் இன்று பகல் 11 மணி முதல் மாலை 4 மணி வரை திடீர் மின் விநியோகத் தடை ஏற்பட்டது.

பாணந்துறை கிரிட் துணை மின் நிலையத்துடன் குரங்கு மோதியதால் நாடளாவிய ரீதியில் மின் தடை ஏற்பட்டது என்று மின்சக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தெரிவித்தார். 02▸

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# அரச மாளிகையில் இருந்து வெளியேற மஹிந்தவுக்கு இறுதி எச்சரிக்கை விடுப்பு



அரச மாளிகையில் இருந்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளியேற வேண்டும் என்பதையே நாட்டு மக்கள் விரும்புகின்றனர் எனவும், எனவே, சட்ட நடவடிக்கைக்குச் செல்வதற்கு முன்னர் அவர் வெளியேறினால் நல்லது எனவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"முன்னாள் ஜனாதிபதிகள் மூவர், அரச வதிவிடங்களைக் கையளித்து விட்டனர். இன்னும் மூவரே கையளிக்க வேண்டியுள்ளது. அவற்றைக் கையளிக்குமாறு அறிவித்துவிட்டோம்.

எனவே, மனச்சாட்சியின் பிரகாரம் கௌரவமாக வெளியேறுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. ஆனால், முடிந்தால் வெளியேற்றுங்கள் என மஹிந்த ராஜபக்ஷ சண்டித்தனம் காட்டிக் கொண்டிருக்கின்றார். சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர், பொது நிர்வாக அமைச்சிடம், அரச வீட்டை கையளித்து விட்டு வெளியேறினால் சிறப்பு.

மஹிந்த ராஜபக்ஷ வெளியேற வேண்டும் என்பதையே நாட்டு மக்களும் விரும்புகின்றனர். கடிதம்தான் வேண்டுமெனில் அதுவும் அனுப்பி வைக்கப்படும்." -என்றார்.

# கஞ்சாவுடன் மூவர் கைது!

(ராமு தனராஜா)



6 ஆயிரத்து 400 மில்லிகிராம் கஞ்சா போதைப்பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

கொவிஜன சேவா நிலையத்துக்குப் பின்புறமாக வசிக்கும் நபர் ஒருவரும், பூஜா நகர் பகுதியைச் சேர்ந்த நபர் இருவருமாக மூவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர் ஒவ்வொருவரிடமும் 3 ஆயிரத்து 500 மில்லிகிராம், 1400 மில்லி கிராம், 1500 மில்லி கிராம் கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

மஹியங்கனைப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைய குறித்த சந்தேக நபர்களைச் சோதனைக்கு உட்படுத்தியபோது அவர்களிடம் இருந்து கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் அவர்களை மஹியங்கனை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**ஜனாதிபதி...**

விஜயம் செய்யவுள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதி மொஹமட் பின் சயீத் அல் நஹ்யானின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்த விஜயத்தை மேற்கொள்கின்றார்.

இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க 2025 ஆம் ஆண்டு டுபாயில் நடைபெறும் உலக உச்சி மாநாட்டிலும் உரையாற்றவுள்ளார்.

உலக உச்சி மாநாட்டில் பங்கேற்கும் பல நாடுகளின் அரச தலைவர்கள் மற்றும் அரச தலைவர்களுடன் ஜனாதிபதி இருதரப்பு பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இலங்கை ஜனாதிபதி மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதி மொஹமட் பின் சயீத் அல் நஹ்யான் ஆகியோருக்கிடையில் இரு தரப்பு பேச்சும் நடைபெறவுள்ளது எனவும், இதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான பல துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்தவுள்ளதாகவும் ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார ஐக்கிய அரபு இராச்சியத்தின் பிரதி ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஷேக் மொஹமட் பின் ராஷித் அல் மக்தூமையும் சந்திக்கவுள்ளார்.

இலங்கைக்கு முதலீடுகளை ஈர்ப்பதற்காகத் தகவல் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, எரிசக்தி, சுற்றுலா, நிதி மற்றும் ஊடகம் ஆகிய துறைகளில் உலகளாவிய முன்னணி நிறுவனங்களின் பல பிரதம நிறைவேற்று அதிகாரிகளுடனும் ஜனாதிபதி பேச்சு நடத்தவுள்ளார்.

---

**நாடு முழுவதும்...**

இந்தச் சம்பவத்தால் நாடு முழுவதும் மின்சார விநியோகம் பாதிக்கப்பட்டது என்றும், மின் விநியோகத்தில் பாரிய இடையூறு ஏற்பட்டது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பாணந்துறை உப மின் கட்டமைப்பில் ஏற்பட்ட பிரச்சினையால், தேசிய மின்சார விநியோக அமைப்பில் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுடன் இணைந்து நாடு முழுவதும் மின் தடை ஏற்பட்டுள்ளது என்று கூறப்பட்டது.

எனினும், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு பின்னர் நிலைமையை 'பாணந்துறை துணை மின்நிலையத்தில் ஏற்பட்ட அவசர நிலை' என்று விவரித்தது. ஆயினும் அமைச்சரின் கூற்றை அமைச்சு உறுதிப்படுத்தவில்லை.

"மறுசீரமைப்பு முயற்சிகள் விரைந்து நடந்து வருகின்றன, அதிகாரிகள் குழுக்கள் கூடிய விரைவில் மின்சாரத்தை மீண்டும் வழமைக்குக் கொண்டு வர வேலை செய்கின்றன." – என்று பிற்பகலில் மின்சக்தி அமைச்சுத் தெரிவித்தது.

மின் விநியோகத்தை வழமைக்குக் கொண்டுவரும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக மின்சக்தி அமைச்சு தெரிவித்தபடி மாலை 4 மணிக்குப் பின்னர் நாட்டின் ஒவ்வொரு பிரதேசமாக மின் இணைப்பு மீளக் கிட்டியது.

மின்சார விநியோகத்தை மீட்டெடுக்கும் பணியில் ஊழியர்கள் முழு அளவில் செயற்பட்டு வருகின்றனர் எனவும், திடீரென ஏற்பட்ட மின்வெட்டுக்கு வருத்தம் தெரிவிப்பதாகவும் மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

மின்வெட்டு தொடர்பாக இலங்கை மின்சார சபை இன்னும் உத்தியோகபூர்வ விளக்கத்தை வெளியிடவில்லை. மேலும் மேம்படுத்தல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தாமதமாகும் தேர்தல்

உள்ளூராட்சித் தேர்தல் விரைவில் நடைபெறும் என்று எதிர்பார்க் கப்பட்ட போதிலும் அது மேலும் காலதாமதமாகும் என்று கூறப்ப டுகிறது.

இந்தத் தேர்தலை எதிர்வரும் ஏப்ரல் மாதம் தமிழ் - சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் நடத்தி முடிக்க அரசு தீர்க்கமாக இருப்பதாக அரசுத் தரப்பில் கூறப்பட்டாலும், தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு பின் னர் சித்திரை மாதத்தில் கூட இதனை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டு இருப்பதாக இப்போது சுட்டிக் காட் டப்படுகின்றது.

பெரும்பாலும் ஜூன் மாதத்துக்கு இது இனிமேல் தள்ளி வைக்கப் படக்கூடும் சூழ்நிலையே தென்படு கின்றது.

2023 ஆம் ஆண்டு முற்பகுதியில் பெறப்பட்ட உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்பு மனுக்க ளோடு இந்தத் தேர்தல் ஏற்கனவே நிலுவையில் உள்ளது. அந்த வேட்பு மனுக்களை ரத்து செய்து, புதிதாக வேட்பு மனுக்களை ஏற்று, தேர்தலை ஆரம்பத்தில் இருந்து நடத்துவதற்கு வழி செய்யும் விதத்தில் புதிய சட்டத் திருத்தமும் ஒன்றை அரசு கொண்டு வருகின்றது.

அந்தச் சட்டத் திருத்தம் மீதான உயர்நீதிமன்ற விசாரணை முடி வுற்று, அந்தத் தீர்ப்புக்காக நாடாளு மன்றம் காத்திருக்கின்றது.

ஆனால் அதற்கிடையில் வரும் 17ஆம் திகதி நாட்டின் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு அதன் மீதான இரண்டாம், மூன்றாம் வாசிப்புகள், வாக்கெடுப்பு, குழு நிலை விவாதம் என்று மார்ச் மாதம் 21ஆம் திகதி வரை வரவு - செலவுத் திட்ட விவகாரம் நீடிக்கவுள்ளது.

இந்த இடைப்பட்ட சமயத்தில், மேற்படி உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டம் மூலத்தை கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகள் அருகி விட்டன என்று நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரி விக்கின்றன.

ஆயினும் எல்லா கட்சிகளும் இணங்கினால் வரவு - செலவுத் திட்ட விவாதத்துக்கு இடையில் இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்று வதற்கான காலத்தை ஒதுக்கிக் கொடுத்து அதனை முன்னெடுக்க லாம் என்று அரசு தரப்பில் ஒரு யோசனை முன்வைக்கப்பட்டிருந் தாலும், அதனைப் பிரதான எதிர்க் கட்சிகள் உட்பட மற்றக் கட்சிகள் ஏற்கும் நிலையில் இல்லை என்று தெரிகின்றது.

அதனால் மார்ச் மாதம் கடைசியில் வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதம் முடிவடைந்து புது வரு டத்துக்கு பின்னரே இந்தச் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றக்கூடிய சூழ்நிலை தென்படுகின்றது.

அப்படி நடக்குமானால், அந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்து, அதற்கு கீழ் புதிய தேர்தல்களுக்கு தேர்தல் ஆணையம் அறிவிப்பு விடுத்து, வேட்பு மனு கோரி, அத னைப் பெற்று, அதன் பின்னர் பிரசார காலத்துக்கு வாய்ப்பளித்து, உள்ளூ ராட்சி தேர்தலை ஜூன் மாதத் தில்தான் நடத்தக்கூடியதாக இருக் கும் என்று விடயம் அறிந்த வட் டாரங்கள் மேலும் கூறுகின்றன.

இந்த உள்ளூராட்சி தேர்தல் பிள் ளையார் கல்யாணம் போல நாளை, நாளை என்று கடந்த இரண்டரை ஆண்டுகளாக இழுபடுவது இலங் கையின் ஜனநாயகத்துக்கு கிட்டிய பின்னடைவுதான்.

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

## GUNAAM'S SUPER MARKET

GSM – குணம்ஸ் சுப்பர்மார்க்கட் – GUNAAM SUPERMARKET

# Gunams super market super deal

**7,8,9/02/2025**

**SPECIAL DEAL**

**900g Kings Curry Powder-14.99**

**Mega deal**

100$ க்கு மேல் கொள்வனவு செய்து
Nestomalt Tin ஒன்றை இலவசமாக
பெற்றுக்கொள்ளுங்கள்




+1 (416) 283-9998

1139 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7



# கஹவத்தை மற்றும் முந்தல் பகுதிகளில் இரண்டு பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்

(க.மகாதேவன்)

கஹவத்தை மற்றும் முந்தல் பகுதிகளில் இரண்டு பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

கஹவத்தை, வெலேகேபொல பகுதியில் உள்ள கல்பில்ல அமுன பகுதியில் உள்ள அணையில் விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் கொடகவெல பகுதியைச் சேர்ந்த 45 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நபர் மது அருந்திவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போது இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, முந்தல் கருங்காலிச்சோலை குளத்தில் மூழ்கி ஒருவர் உயிரிழந்தார். உயிரிழந்தவர் முந்தலம் பகுதியைச் சேர்ந்த 48 வயதுடையவர் எனத் தெரிவிக்கப் படுகிறது. இறந்தவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பது தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதேவேளை, கந்தன்குடி பைல்வான் கடற்கரையில் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார். காணாமல் போனவர் கந்தன்குடி பகுதியைச் சேர்ந்த 16 வயதுடையவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.





# இ.போ.சபை வவுனியா சாலையின் பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது!

(கி.வசந்தன்)

இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியாசாலையின் பொறியியல் பகுதியினரால் முன்னெடுக்கப்பட்ட பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம் பேச்சுகளை அடுத்து கைவிடப்பட்டது.

சாலையின் பொறியியல் பிரிவில் பணிபுரியும் ஊழி யர்களுக்கு இரண்டு மாதங்களாக மேலதிக நேரக்கொடுப் பனவுகள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனை அடுத்து இன்று காலை முதல் அவர்களால் பணிபுறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இத னால் வவுனியா சாலையின் பஸ்கள் காலை முதல் சேவை களை முன்னெடுக்கவில்லை.

இந்நிலையில் சாலைக்கு சென்ற தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தார்.

இதன்போது அவர்களுக்கான மேலதிக நேரக்கொடுப் பனவை விரைவாக வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டது. இதனையடுத்து போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது.

இதேவேளை இந்த விடயம் தொடர்பாக எதிர்வரும் வாரம் போக்குவரத்து சபையின் உயர் அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தை ஒன்று முன்னெடுக்கப்படத் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

















# சிறுதானியப் பயிர்ச்செய்கை ஊக்குவிக்கப்பட வேண்டும்!

## வடக்கு மாகாண ஆளுநர் வலியுறுத்து

“பெரும்போக நெற்செய்கையின் அறுவடையும் முடிவுக்கு வரும் நிலையில் விவசாயிகளை சிறுதானியப் பயிர்ச் செய்கைக்கு ஊக்குவிக்க வேண்டும். அதேநேரம் அந்த விளைபொருட்களுக்குரிய சந்தை வாய்ப்புக்களையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த நடவடிக்கைகளை மத்தி, மாகாணம் என்று பாராமல் எமது மக்கள் – விவசாயிகள் என்ற எண்ணத்துடன் அனைத்து திணைக்களங்களும் இணைந்து பணியாற்ற வேண்டும்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

சிறுதானிய பயிர்ச்செய்கை ஊக்குவிப்புத் தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது. வடக்கு மாகாண பிரதம செயலாளர், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்ட மாவட்ட செயலர்கள், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், விவசாயப் பணிப்பாளர், மாவட்ட விவசாயப் பிரதிப் பணிப்பாளர்கள், நீர்பாசனத் திணைக்களப் பொறியியலாளர், விவசாய ஆராய்ச்சி மேலதிகப் பணிப்பாளர் உள்ளிட்ட பலர் இதில் பங்கேற்றனர்.

வடக்கு மாகாண ஆளுநர் ஆரம்ப உரையில்,

“சிறுபோக நெற்செய்கைக்கு முன்னதாக சிறுதானியப் பயிர்ச்செய்கையை விவசாயிகளிடம் ஊக்குவிக்க வேண்டும். அவர்களுக்கு இதை ஊக்கப்படுத்துவதுடன் அவர்களுக்கான சந்தை வாய்ப்பையும் உரியவாறு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மேலும் விவசாயிகளைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுமாறு கோரும் அதேவேளை, விவசாயிகளுக்கான தேவைப்பாடுகளைக் கேட்டறிந்து ஒவ்வொரு திணைக்களங் களும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதேபோல கடந்த காலங்களில் இவ்வாறான சிறுதானியப் பயிர்ச்செய்கைக்காக ஏற்று நீர்பாசனங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அதை மீளவும் முழு வீச்சில் ஆரம்பிக்க வேண்டும்.” – என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், சிறுதானியப் பயிர்ச் செய்கையை முன்னெடுப்பதில் தரவுகளைப் பெற்றுக்கொள்வது சவாலாக இருப்பதாகக் குறிப்பிட்டார். சரியான தரவுகள் இல்லை எனவும் தெரிவித்தார்.

தரவுகள் துல்லியமாக இருந்தால் மாத்திரமே, சிறுதானியப் பயிர்கள் உற்பத்தி செய்யப்படும் காலங்களில், இறக்குமதி செய்யப்படும் சிறுதானியங்களுக்கான வரியை அதிகரிக் குமாறு அரசிடம் கோரும் வாய்ப்பு உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் சிறுதானிய பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்படும் காலங்களில் கால்நடைகளை கட்டுப்படுத்தி வைத்திருக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் எந்தெந்த சிறுதானியப் பயிர்ச்செய்கை எந்தளவு நிலப்பரப்பில் முன்னெடுக்க



எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்ற விவரங்களை மாவட்டச் செயலர்கள் முன்வைத்தனர். அதேநேரம் விதைப்புக்கான கால அட்டவணையை விவசாய ஆராய்ச்சிப் பிரிவு அறிவிக்க வேண்டும் என்றும் கோரினர். அதேபோன்று சிறுதானியப் பயிர்ச்செய்கைக்கான காப்புறுதி தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று மாவட்ட செயலர்கள் கேட்டுக்கொண்டனர்.

இங்கு மேற்கொள்ளப்படும் சிறுதானிய உற்பத்திப் பொருட்களின் தரம், இறக்குமதி செய்யப்படும் சிறுதா னியங்களின் தரத்தைவிட குறைவாக இருப்பதால் பொது மக்கள் இறக்குமதி செய்யப்படும் சிறுதானியங்களை நாடுவ தாகத் தெரிவிக்கப்பட்டது. எனவே, தரத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆளுநர் பணித்ததுடன், கைவசம் உள்ள இயந்திரங்கள் மூலமாக அதை முன்னெடுக்குமாறும் கோரினார்.

தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலக்கடலைக்கு பெறுமதிசேர் உற்பத்திப் பொருட்களாக மாற்றி விற்பனை செய்வதற்கும் ஏற்றுமதிக்குமான வாய்ப்பு உள்ளதால், நிலக்கடலையை விவசாயிகள் ஊக்கத்துடன் மேற் கொள்வார்கள் என்றும், அதேபோன்று ஏனைய சிறுதானியப் பயிர்களும் பெறுமதிசேர் உற்பத்திப் பொருட்களாக மாற்றப்பட வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இது தொடர்பில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக நடவடிக்கை எடுப்பது தொடர்பில் ஆராயுமாறு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரை ஆளுநர் பணித்தார்.

தற்போது வயல்களில் பெருமளவு ஈரத்தன்மை இருப்ப தாலும் குளங்களில் போதியளவு நீர் உள்ளமையாலும், சிறுதானியப் பயிர்ச்செய்கையில் கடந்த காலங்களைவிட அதிகளவு உற்பத்தியைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும், அதை உரிய வகையில் சந்தைப்படுத்தவும் தேவையான நடவடிக்கைகளை இப்போதே திட்டமிடுமாறும் ஆளுநர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.



# ‘சகோதர பாசம் - நிவாரண உதவி’ வட பகுதியில் சீனா வழங்குகின்றது

(ந.லோகதயாளன்)

வடக்கில் வெள்ளத்தால் பாதித்த மக்களிற்கான சீனாவின் ‘சகோதர பாசம் – நிவாரண உதவி’ இன்று வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் வழங்கப்பட்டது.

வடக்கின் 5 மாவட்டத்திலும் வெள்ளத்தால் பாதித்த குடும்பங்களிற்கு சீனாவின் ‘சகோதர பாசம்’ திட்டத்தின் கீழ் நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன.

வடக்கிற்கு இரு நாள் பயணமாக இன்று வருகைதந்துள்ள சீனவின் துணைத் தூதுவர் இன்றும் நாளையும வடக்கின் மாவட்டங்களிற்கு பயணித்து நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கின்றார்.

யாழ்ப்பாணம. மாவட்டத்தில் ஆயிரத்து 70 பேருக்கும், ஏனைய மாவட்டங்களில் தலா 350 குடும்பங்களிற்கும் இந்த நிவாரணப்பொதி வழங்கப்படவுள்ளதாக தூதரகம் அறிவித்துள்ளது.

6 ஆயிரத்து 490 ரூபா பெறுமதியான நிவாரணப் பொதி விநியோகங்களைத் தொடர்ந்து சில சந்திப்புக்களிலும் சீனத் தூதரக அதிகாரிகள் ஈடுபடவுள்ளனர் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.
















# 500 நாள்களுக்கு பின் சொந்த நாட்டுக்கு திரும்பினார்கள் தாய்லாந்து பிரஜைகள்

ஹமாஸ் அமைப்பினால் விடுவிக்கப்பட்ட ஐந்து தாய்லாந்து பிரஜைகள் சுமார் 500 நாள்களுக்கு பின்னர் தமது சொந்த நாட்டுக்கு திரும்பியுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2023 ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி தெற்கு இஸ்ரேலில் நடத்தப்பட்ட தாக்குதலின்போது, இஸ்ரேலில் பண்ணையொன்றில் பணியாற்றிவந்திருந்த இந்த ஐவரும் சிறைபிடிக்கப்பட்டிருந்தனர்.

இந்தநிலையில், இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக கடந்த ஜனவரி 30 ஆம் திகதி இவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

அதற்கமைய, குறித்த தாய்லாந்து பிரஜைகள் ஐவரும் இன்று காலை பேங்கொக் சுவர்ணபூமி விமான நிலையத்தை சென்றடைந்துள்ளனர்.

மேற்படி ஐந்து பேரும் அந்த நாட்டு வெளியுறவு அமைச்சின் அதிகாரிகள் குழு மற்றும் அவர்களது உறவினர்களால் வரவேற்கப்பட்டனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.









# மகா கும்பமேளா நிகழ்வில் 4 ஆவது முறையாக தீ விபத்து

உத்தரப் பிரதேச மாநிலமான பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளா நிகழ்வில் நான்காவது முறையாக தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

செக்டார் 19 பகுதியில் அமைக்கப்பட்டிருந்த கல்ப்வாசி கூடாரம் அருகே , எரிவாயு கொள்கலன் கசிந்ததன் காரணமாக இத் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி தெரிவிக்கின்றன.

இந்த விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் மூன்று தீயணைப்பு வாகனங்களில் விரைந்த தீயணைப்பு படையினர் தீயை கட்டுப்படுத்த முயற்சித்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.




# என்னை சிறையில் மோசமாக நடத்தினார்கள் இராணுவ தளபதிக்கு இம்ரான் கான் கடிதம்!

ஊழல் வழக்கில் தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் பாகிஸ்தான் இராணுவ தளபதி ஆசிம் முனிருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். இந்த கடிதம் அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ளார்.

அந்த கடிதத்தில் சிறையில் தன்னை மோசமாக நடத்தினார்கள் எனவும் சூரிய ஒளி, மின்சாரம் இல்லாமல் 20 நாள்கள் மரண தண்டனை கைதிகளுக்கான தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டேன் என்றும் கூறியுள்ளார்.

பாகிஸ்தானின் ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பிற்கும் , இராணுவத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையே அதிகரித்து வரும் இடைவெளியைக் குறைப்பது அவசியம் என்றும் இதற்கு இராணுவம் தனது அரசியலமைப்பு வரம்புகளுக்குத் திரும்ப வேண்டும் எனவும் இம்ரான் கான் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பாகிஸ்தான் இராணுவம் அரசியலிலிருந்து விடுபட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 09/02/2025

**கனடாவின் அல்பர்ட்டா மாகாணத்தில் இலத்திரனியல் வாகனங்களுக்கு வரி**

கனடாவின் அல்பர்ட்டா மாகாணத்தில் இலத்திரனியல் வாகனங்களுக்கு வரி அறவீடு செய்யப்படஉள்ளது.சுமார் 200 டாலர்கள் வரியாக அள விடப் படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கனடா மீதான ட்ரம்பின் அச்சுறுத்தல் உண்மையானது

## பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவிப்பு



**கனடாவை அமெரிக்காவின் ஒரு பகுதியாக இணைப்பதாகக் கூறும் ட்ரம்பின் அச்சுறுத்தல் உண்மையானது என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ எச்சரிக்கை விடுத்துள்ளார் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

**அத்துடன், அமெரிக்காவின் 51 ஆவது மாநிலமாக கனடாவை இணைப்பதற்கு ட்ரம்ப் காட்டும் ஆர்வத்திற்கான காரணத்தையும் அவர் வெளியிட்டுள்ளார்.**

**இதுதொடர்பில்அவர்குறிப்பிடுகையில்,**

“கனடாவை அமெரிக்காவுடன் இணைக்கப்போவதாக ட்ரம்ப் அச்சுறுத்திவரும் விடயம் அனைவரும் அறிந்ததே. இந்நிலையில், ட்ரம்பின் அச்சுறுத்தல் உண்மையானதுதான்.

பழங்காலத்தில் வலிமையான மன்னர்கள் மற்ற நாடுகளைப் பிடிக்கும் ஆசையுடன் போருக்குப் புறப்பட்டதுபோல, அல்லது கொஞ்சம் கொஞ்சமாக பிரித்தானியா பல நாடுகளை தனக்கு அடிமைப்படுத்தினது போல, ட்ரம்புக்கும் நாடு பிடிக்கும் ஆசை ஏற்பட்டுள்ளதுபோல் தெரிகிறது.

சமீபத்தில், உக்ரைன் நாட்டிலுள்ள அரிய வகை தாதுக்கள் மற்றும் கனிம வளங்கள் ட்ரம்ப் கண் வைத்துள்ளதாக செய்திகள் வெளியாகி வருகின்றன.

அதேபோல, கனடாவின் அரிய வகை தாதுக்கள் மீதும் ட்ரம்ப் கண் வைத்துள்ளார். ஆக, கனடாவை அமெரிக்காவுடன் இணைத்துவிட்டால் தனது ஆசையை நிறைவேற்றுவது ட்ரம்புக்கு எளிதாகிவிடும்.

எனவே, கனடாவை அமெரிக்காவுடன் இணைக்கப்போவதாக ட்ரம்ப் சாதாரணமாக கூறவில்லை. உண்மையாகவே அவர் கனடாவின் அரிய வகை தாதுக்களுக்காக கனடா மீது கண் வைத்துள்ளார்.

இதற்காகத்தான் கனடாவை அமெரிக்காவுடன் இணைக்கப்போவதாக அவர் மிரட்டிவருகிறார்.” - என்றார்.

# சீனா உளவு பார்க்கின்றது; கனடா பரபரப்பு குற்றச்சாட்டு

ஆளுங்கட்சி தலைவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரை சீனாவிலிருந்து சில அந்நிய சக்திகள் உளவு பார்ப்பதாக கனடா குற்றம் சாட்டியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கனடாவின் நிதி அமைச்சர் பதவியை கிறிஸ்டியா பிரீலாண்ட் கடந்த டிசம்பரில் இராஜினாமா செய்தார். அதைத் தொடர்ந்து பிரதமர் பதவியையும், கட்சித் தலைவர் பதவியையும் ஜஸ்டின் ட்ரூடோ இராஜினாமா செய்தார். புதிய கட்சித் தலைவர் நியமிக்கப்படும் வரையிலும் அவர் பிரதமராக பதவி வகிப்பார் என அறிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து ஆளும் லிபரல் கட்சியின் புதிய தலைவரை தேர்ந்தெடுக்கும் பணிகள் நடக்கின்றன. இதன் முக்கிய வேட்பாளராக கிறிஸ்டியா பிரீலாண்ட் உள்ளார்.

இந்நிலையில், அவரது பிரசார குழு உறுப்பினர்களையும், கட்சியின் முக்கிய நிர்வாகிகளையும் குறிவைத்து சில அந்நிய சக்திகள் தீங்கிழைக்கும் செயலில் ஈடுபட்டிருப்பதாக கனடா அரசின் உலகளாவிய விவகாரங்களுக்கான உடனடி நடவடிக்கை அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.



இதில், சீனாவைச் சேர்ந்த சீனா டிஜிட்டல் டைம்ஸ் என்கிற இணையதள செய்தி நிறுவனத்தின் நிபுணர்களும், சீன அரசின் சமூக வலைதளமான வீசேட் கணக்குகளும் சம்மந்தப்பட்டிருப்பதாக கனடா கூறியுள்ளது.

இதற்கு கனடாவில் உள்ள சீன தூதரகம் மறுப்பு தெரிவித்துள்ளது. இதுபோன்ற உண்மைக்கு புறம்பான தகவல்களின் அடிப்படையில் சீனாவை தாக்கி அவதூறு பரப்புவது அபத்தமானது, அர்த்தமற்றது என தூதரக செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.